செய்தி வெளியீடு எண்: 101/2018 நாள்: 20.02.2018

**சுற்றுலாத்துறையின் சார்பில் அரசு பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகள் செல்லும் ஒரு நாள் சுற்றுலா விழிப்புணர்வு பேருந்து பயணத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.**

வேலூர் கோட்டையில் உள்ள சுற்றுலா அலுவலகம் அருகில் இருந்து சுற்றுலாத்துறையின் சார்பில் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெரும் பள்ளிகளில் படிக்கும் 150 மாணவ மாணவிகள் சுற்றுலா தலங்களின் முக்கியத்துவம் மற்றும் அதனுடைய வரலாறுகளை அறிந்து கொள்ளும் விதமாக விழிப்புணர்வு பெற்றிடும் வகையில் ஒரு நாள் சுற்றுலா பயணம் 3 பேருந்துகளில் செல்லுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ.ராமன்.இ.ஆ.ப. அவர்கள் கொடியசைத்து துவக்கிவைத்தார்கள்.

2017-2018 ஆம் ஆண்டின் சுற்றுலாத்துறையின் மான்ய கோரிக்கை அறிவிப்பின் போது மாண்புமிகு சுற்றுத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள 32 மாவட்டங்களிலுள்ள அரசு மற்றும் அரசுநிதியுதவி பெரும் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவிகள் தமிழகத்தில் உள்ள சுற்றுலா தலங்களின் முக்கியத்துவம் மற்றும் அதனுடைய வரலாறுகளை அறிந்து கொள்ளும் விதமாக விழிப்புணர்வு பெற்றிடும் வகையில் ஒரு நாள் சுற்றுலா மேற்கொள்ளலாம் என்று தெரிவித்தார். அதனடிப்படையில் வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு மற்றும் அரசு நிதியுதவி பெரும் பள்ளிகளில் படிக்கும் 150 மாணவ மாணவிகள் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு சுற்றுலா மேற்கொண்டு அங்குள்ள திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், ரமணா ஆசிரமம், மற்றும் சாத்தனூர் அணை ஆகிய இடங்களை சென்று பார்வையிட 3 விழிப்புணர்வு பேருந்துகளில் சுற்றுலா செல்ல சுற்றுலாத்துறையின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்பேருந்துகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ.ராமன்.இ.ஆ.ப. அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து மாணவ மாணவிகளிடம் அரசு உங்களுக்கு ஏற்பாடு செய்துள்ள இந்த வசதிகளை பயன்படுத்தி பாதுகாப்பான பயணத்தை மேற்கொண்டு மகிழ்ச்சியாக சுற்றுலா சென்று வர வேண்டும் மாணவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

இந்த சுற்றுலா பயணத்தின் போது மாணவ மாணவிகளுக்கு காலை, மதிய உணவுகள் மற்றும் சிற்றுண்டி, சுற்றுலா பை மற்றும் தொப்பியுடன் சுற்றுலா சென்று வந்தற்கான சான்றிதழ்கள் சுற்றுலாத்துறையின் மூலம் வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியின்பேர்து மாவட்ட சுற்றுலா அலுவலர் திரு.வி.ஜான்பிரிட்டோ, உதவி சுற்றுலா அலுவலர் திரு.இளமுருகன் மற்றும் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் கலந்துக்கொண்டனர்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர்-9.